டாக்டர் அப்துல்லாஹ்

# பாரதிராஜா என் ரசிகர்!
# வைரமுத்து என் மாணவர்!
## அவர்களுக்கும் இஸ்லாத்தைச் சொல்வேன்!



**கேள்வி : இஸ்லாத்தைத் தழுவி நான்கு மாதங்களாகிவிட்டன. எப்படி உணருகிறீர்கள்?**

பதில் : ஆரத் தழுவி இருக்கிறேன். அந்த இன்பத்தை வார்த்தைகளில் எப்படி சொல்வேன்? காணாமல் போன குழந்தை ஒன்று பல நாள் பிரிவிற்கும் தவிப்பிற்கும் பிறகு அந்தத் தாயிடம் திரும்பினால் எப்படி அக் குழந்தை இன்புறுமோ அப்படிப்பட்டதொரு இன்பத்தை அடைந்துள்ளேன் என்று சொல்லலாம்.

**கேள்வி: பல ஆண்டு ஆராய்ச்சிக்குப் பிறகு இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்துள்ளதாக அறிகிறோம். அது பற்றி...?**

பதில் : நீங்கள் முன்பு சொன்னது போல் நான்கு மாதத்திற்கு முன்பு இஸ்லாத்தைத் தழுவினாலும் கிட்டத்தட்ட இருபதாண்டுகளுக்கும் அதிகமாக முஸ்லிம்களோடு தொடர்பு கொண்டுதான் நான் இருந்தேன். ஆனாலும் இஸ்லாத்தை ஆழமாக நான் கிட்டத்தட்ட பத்தாண்டுகளுக்கு மேலாக படித்து வந்தேன். என்னுடைய முதல் சொற்பொழிவில் கூறியதுபோல் ஒருநாள் டிரெய்னில் போகும் போது பெரம்பூர், ரயில்வே ஸ்டேஷனைக் கடக்கும் போது எழுதப்பட்டிருந்த திருக்குர்ஆன் ஹோர்டிங்ஸ்தான் என்னைத் திருக்குர்ஆன் பால் இழுத்து வந்தது எனலாம். அடுத்த ரயில் நிலையத்தில் இறங்கி சென்னை ஜமாலியாவில் அமைந்துள்ள இஸ்லாமிக் ஃபவுண்டேஷன் டிரஸ்டிற்கு கொளுத்தும் வெய்யிலில் நடந்தே வந்தேன். அங்கிருந்த கவிஞர் ‘தண்ணன்’ முஹம்மது மூஸாவும், சகோதரர் எஸ்.என்.சிக்கந்தரும் எனக்குத் திருக்குர்ஆனைத் தந்தார்கள். அதை அவர்கள் இலவசமாக தர முன்வந்தும் நான் அதை ஏற்க மறுத்தேன். பணம் கொடுத்து வாங்கினேன். அதனை பைண்டரிடம் கொடுத்து பக்கத்திற்கு பக்கம் வெள்ளைத் தாள் வைத்து பைண்டிங் செய்யும்படி கூறி வாங்கிச் சென்றேன். நான் படிக்க ஆரம்பித்தவுடன் அந்த வெள்ளைத் தாள்களில் குறிப்புகளை எழுதிக் கொண்டே வந்தேன். ஏறக்குறைய இரண்டரை ஆண்டுகளில் திருக்குர்ஆனை முழுவதும் படித்து முடித்தேன். அதே போன்று சிங்கப்பூர் சகோதரர் எம்.ஏ. முஸ்தஃபா அவர்கள் தமது ரஹ்மத் அறக்கட்டளையின் மூலம் வெளியிட்ட ஸஹீஹுல் புகாரி ஏழு வால்யூம் நூல்களை எனக்குத் தந்தார். இறைவனின் திருமறை, நபிகளார் (ஸல்) அவர்களின் அருள்மொழிகள் என்னிடம் இறைவன் திட்டமிட்டுத்தான் கிடைக்கச் செய்தான் என்றுதான் எண்ணுகிறேன். திருக்குர்ஆனை நான் ஆராய்ச்சி செய்தேன் என்றெல்லாம் நான் சொல்ல மாட்டேன். இறைவனின் வார்த்தைகளை ஆராய்ச்சி செய்ய நான் யார்? திருமறையைத் தெரிந்து கொண்டேன். வரலாற்றுப் பின்னணியோடு அதனைப் படித்ததன் மூலம் பல உண்மைகளை அறிந்துகொண்டேன்.

**கேள்வி : இஸ்லாத்தைத் தழுவியதால் எதை அடைந்தீர்கள்? எதனை இழந்தீர்கள்?**

பதில் : ரொம்பவும் பழக்கப்பட்ட நேசித்த நண்பர்களை இழந்தேன். உறவினர்கள் ஒதுங்கிப் போவதை உணர்ந்தேன். சொந்த சகோதரரே தனது இல்லத் திருமணத்திற்கு என்னை அழைக்கவில்லை. நாடு முழுவதும் உள்ள எனது தமிழ் ரசிகர்கள் என்னை விநோதமாக பார்ப்பதை நான் அறிந்தேன். சுருக்கமாகச் சொன்னால் சுற்றமும் நட்பும் இழந்தேன். கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் தத்துவத் துறை பேராசிரியராக இருந்துவந்த என்னை இனிமேல் உங்களது ஒப்பந்தத்தை நாங்கள் நீட்டிக்க விரும்பவில்லை என்ற அறிவிப்பு என்னை அடைந்துள்ளது என்றால் தெரிந்துகொள்ளுங்களேன். எனது மார்க்கத் தழுவல் அவர்களை எந்த அளவுக்கு பாதித்துள்ளது என்பதை. ஆனால், நான் எதிர்ப்பார்க்காத பல உறவுகள் எனக்கு தினந்தோறும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.
இஸ்லாத்தைத் தழுவியபிறகு முகம் தெரியாத என்னை நேசிக்கும் பல சகோதரர்களிடமிருந்து கிடைத்துவரும் அன்பை அல்லாஹ் எனக்கு வழங்கிவிட்டான். புகழனைத்தும் இறைவனுக்கே. அந்த அன்பு தேசம் கடந்தது. நான் ஆத்ம திருப்தியோடு சொல்கிறேன், என்னை பாசக் கடலில் மூழ்கடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இழந்ததைவிட அடைந்து வருவது அதிகம். இன்னும் அடைவேன் இன்ஷா அல்லாஹ்.

**கேள்வி : பெரியார்தாசனாகி இருந்த தாங்கள் சித்தார்த்தனாக மாறி இன்று அப்துல்லாஹ்வாகி இருக்கிறீர்கள். சர்ச்சைக்குரிய விதத்தில் திராவிடர்க் கழகத்தினர் உங்களைக் கடுமையாக விமர்சித்து வருவது பற்றி...?**

பதில் : இவர்கள் அனைவருக்கும் ஒன்றை நான் தெளிவாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 30 ஆண்டுகளாக பெரியாரின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு வாழ்ந்தேன். பெரியாரின் இறைமறுப்புக் கொள்கையை பட்டி தொட்டியெங்கும் பேசி வந்திருக்கிறேன். தமிழகத்தில் நான் செல்லாத கிராமங்கள் மிகக் குறைவு. பேசாத ஊர்கள் இல்லை. இவர்கள் இன்று செய்துவருவதைக் காட்டிலும் பல ஆயிரம் மடங்கு அதிகமாக பெரியாரின் கொள்கைகளைத் தாங்கிச் சென்றுள்ளேன். அவர்கள் தங்கள் மனசாட்சியைத் தொட்டுப் பார்க்க வேண்டும். இதுநாள் வரை நாங்கள் (திராவிடர்க் கழகத்தினர்) இஸ்லாத்தின் முதல் கலிமாவாக பாதி கலிமாவை சொல்லி வந்திருக்கிறோம். அதாவது, ‘லாயிலாஹா – கடவுள் இல்லை’ என்று. இப்போது ‘இல்லல்லாஹ்’ என்று நான் முழுக் கலிமாவையும் சொல்லி இருக்கிறேன். ‘கடவுள் இல்லை அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை’ என்று வாக்கியத்தைப் பூர்த்தி செய்துள்ளேன். இன்று இவர்கள் இந்த அளவுக்கு துள்ளி குதிப்பதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லை.
52 வாரங்களாக கல்கி இதழில் ‘நான் நாத்திகன் இல்லை’ என்று எழுதி வந்தேன். அப்போது அந்தத் தொடரை இவர்களும் படித்தார்கள் தானே. அப்போது ஏன் வாயைத் திறக்கவில்லை? ‘எங்காவது போ, எப்படியாவது இரு, இஸ்லாத்தில் மட்டும் சேர்ந்துவிடாதே...’ எப்படிப்பட்ட மனநிலை இது? இவர்கள் மனத்தில் எப்படிப்பட்ட எண்ணம் ஓடிக் கொண்டிருக்கிறது? பொய் வேஷம் தாங்கிக் கொண்டல்லவா திரிகிறார்கள் இவர்கள்.
திருப்பதிக்கு சென்று ஏழுமலையானை தரிசித்துவிட்டு வரும் பக்தரான எனது நண்பர் நான் நாத்திகனாக இருந்தபோதுகூட நட்பு பாராட்டுவார். ஆனால், முஸ்லிம் ஆனேன் என்று தெரிந்தவுடன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. முஸ்லிம் என்றால் என்ன விஷமா? இந்த மனோநிலைதான் எனக்கு வேதனை அளிக்கிறது.
பெரிய அரசியல் தலைவர்கூட ‘என்னைய்யா இப்படி செய்துவிட்டாய்’ என்றுதான் கேட்கிறார். அரைநூற்றாண்டுகாலமாக ஒடுக்கப்பட்டவர்களுக்காக போராடுவதாகக் காட்டிக் கொள்பவரின் நிலையே இதுதான் என்றபோது எனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது.

**கேள்வி : மனோதத்துவப் பேராசிரியராக அறிப்பட்ட நீங்கள், பேச்சாளர், நடிகர், இலக்கியவாதி, எழுத்தாளர் என்று பல முகங்களைக் கொண்டிருக்கிறீர்கள். இன்று மக்களை எளிதில் அடையும் ஊடகமான சினிமாத் துறையில் உங்களது மாற்றம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?**

பதில் : உண்மைதான். என்னை மனோதத்துவப் பேராசிரியராகவும் பேச்சாளராகவும் பெரியார் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்பவராகவும்தான் இயக்குநர் பாராதிராஜா பார்த்தார். எனது தீவிர ரசிகரான அவர் தனது 'கருத்தம்மா' படத்தில் நடிக்க வைத்தார். முதல் படத்திலேயே தேசிய விருதைப் பெற்றேன். கவிப்பேரரசு வைரமுத்து எனது மாணவர். எனது பேச்சையும் ஆழமான கருத்துகளையும் ரசிப்பவர் மட்டுமல்ல விவாதிப்பவரும்கூட. நல்ல மனிதர். அவரது நண்பர்தான் சகோதரர் சிங்கப்பூர் முஸ்தஃபா. ஒருவகையில் ஸஹீஹுல் புகாரி நூல்கள் கிடைக்க வைரமுத்துவும் ஒரு காரணகர்த்தா என்றுதான் சொல்ல வேண்டும். கிட்டத்தட்ட 25 படங்களில் நான் நடித்துவிட்டேன். இனிமேல் நடிக்க மாட்டேன். அதேபோன்று விஜய் தொலைக்காட்சியில் நான் நடத்திவந்த 'வாங்க பேசலாம்' நிகழ்ச்சியை நடத்துவதையும் விட்டுவிட்டேன். என்னுடைய மார்க்கத் தழுவல் அங்கு எப்படிப்பட்ட அதிர்வை ஏற்படுத்தி உள்ளது என்று நான் அறியேன். ஆனாலும் எனது சினிமாத் துறை நண்பர்களுக்கு இஸ்லாமியச் செய்தியை ஒரு நல்ல முஸ்லிமாக எடுத்துரைப்பேன். ஹிதாயத் கொடுப்பதும் கொடுக்காததும் இறைவனின் விருப்பம்.

**கேள்வி : முஸ்லிம்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில் : உங்களுக்கு எதிரி நீங்கள்தான். மாற்று மதத்தினர் முஸ்லிம்கள்மீது தவறான அபிப்ராயம் கொண்டுள்ளார்கள். அதனைக் களைவதில் முஸ்லிம்கள் மிகவும் பின்தங்கியுள்ளார்கள். உடல் சுத்தம், மனச் சுத்தம், உடைச் சுத்தம் இஸ்லாத்தில் கட்டாயம். ஆனால், முஸ்லிம்கள் ஆரோக்கியமற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள். இந்த உலக வாழ்க்கை நிரந்தரமற்றது. மார்க்கத்தை முன்னெடுத்துச் சென்று சொல்ல வேண்டும். உங்கள் மாற்று மத நண்பர்களுக்கு மார்க்கத்தைச் சொல்ல வேண்டும். நீங்கள் முஸ்லிம்களாக பிறந்ததினால் இஸ்லாத்தின் அருமை தெரியாமல் இருக்கிறீர்கள். சொர்க்கத்துக்குப் போக வேண்டும். அதைப் பற்றி சிந்தியுங்கள். அதுதான் வெற்றிக்குரிய வழி. ஓர் இலக்கை அடைய நோக்கமாகக் கொண்டால் அதற்குரிய பாதையில் தென்படும் இடர்களைத் தகர்த்துவிடுங்கள். நமது இலக்கு சுவனம் என்பதை தீர்மானித்துவிட்டால் பாவங்களைச் செய்வதை விட்டுவிடுவோம்.

**கேள்வி : நீங்கள் இஸ்லாத்தைத் தழுவிய அதே நாளன்று இன்னொரு நாத்திகரும் இஸ்லாத்தைத் தழுவிய வரலாறு தெரியுமா?**

பதில் : ஆம். என்னை மிகவும் மகிழ்ச்சிப்படுத்திய செய்தி அது. ஃபிர்தவ்சி என்பது அவர் பெயர். எகிப்து நாட்டைச் சேர்ந்தவர். 500 ஆண்டுகளுக்கு முன் கடவுள் மறுப்புக் கொள்கையில் உச்சியில் இருந்த நாத்திகவாதி. அவரும் மார்ச் 13 ஆம் நாள்தான் இஸ்லாத்தைத் தழுவினார் என்று தெரிந்துகொண்டேன். இது எதிர்பாராத நாள். இதிலும் இறைவனின் நாட்டம் இருக்கிறது போலும்.

**கேள்வி : உங்களது எதிர்காலத் திட்டம் என்ன?**

பதில் : இப்போது எனக்கு 63 வயதாகிறது. பேராசிரியர் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். மனோவியல் பயிற்சி அளிக்கிறேன். இன்று முஸ்லிம்கள் பிரிந்து சிதறிக் கிடக்கிறார்கள். கல்வியறிவு குறைந்தவர்களாக இருக்கிறார்கள். இயக்கங்கள் 'ஈகோ'வில் சிக்கிக் கொண்டிருக்கின்றன. நாம் செல்ல வேண்டிய தூரம் மிக அதிகமானது. சில்லறை விஷயங்களில் கவனத்தை செலுத்திக் கொண்டிருந்தோமானால், எப்போது நம்மால் இலக்கை அடைய முடியும்? நமக்குள் இருக்கும் பேதங்களை முதலில் போக்கிக் கொள்ள வேண்டும். விஞ்ஞான ரீதியில் தீர்வுகளைச் சொல்லும் மார்க்கம் இஸ்லாம். இறைவனின் கோபத்திற்கு ஆளாகாத வகையில் நாம் செயல்பட வேண்டும் என்பது என் எண்ணம். இஸ்லாமிய அடிப்படையில் மனோதத்துவ முறையை உருவாக்க வேண்டும் என்பது எனது எதிர்காலத் திட்டங்களில் முக்கியமானது.
தமிழ் பேசும் மக்களுக்கு நான் கடந்து வந்த பாதையைச் சொல்லி வருகிறேன். தொடர்ந்து சொல்வேன். முன்மாதிரி முஸ்லிமாக வாழ்ந்து காட்டுவேன் இன்ஷா அல்லாஹ்.

**நேர்காணல்: – ஃபிதா**